1975 மார்ச் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியொன்றும் இல்லை.

திரு. கே. எ. வகாப் : முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் உள்ள சிரமங்களைப் போக்குவதற்கு சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்களிலேயே அரசாங்கமே வைத்து விற்கக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது எல்லா இடங்களிலும் சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்கள் இல்லை. இருக்கிற இடங்களில் கவனிக்கப்படலாம். எல்லா இடங்களிலும் அப்படிக் கொடுப்பது என்பது கஷ்டமானதாகும்.

திரு. பூ. எட்டியப்பன் : தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் கள்ளமார்க்கட்டிலே விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு மூல காரணம் அந்த ஸ்டாம்ப்களை 2, 3 மாதங்களுக்கு முன்னாலேயே வாங்கி வைத்து பிற்காலத்தில் விற்கப்படுகிறது, அப்படி விற்கப்படுகிறபோது பெயர் எழுதாமல் வைத்துக்கொள்கிறார்கள். பிறகு கொடுக்கிறார்கள். இதனால் 5 ரூபாய்க்கு விற்க வேண்டிய ஸ்டாம்ப் பேப்பர் 10, 15 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இந்த ஸ்டாம்ப் பேப்பர்கள் சரியான முறையில் விற்கப்படுகிறதா என்று அதிகாரிகள் அடிக்கடி கண்காணித்து 2, 3 மாதங்களுக்குப் பிறகு வேறு ஒரு பெயருக்கு எழுதுவது கூடாது என்று தடை செய்ய அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட புகார்கள் தெரிவிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

* 229 **வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, தியாகராயநகரில் 12—11—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த பொருட்களின் மதிப்பு, உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆகியவைகள் எவ்வளவு ?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பணி மேற்கொள்ளப்பட்டதா ?

[1975 மார்ச் 7

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) சென்னை தியாகராயநகரில் 12—11—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த பொருட்களின் மதிப்பு சுமார் ரூ. 38,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விபத்தில் 1 முதல் 13 வயதுக்கு உட்பட்ட மூன்று குழந்தைகள் உயிரிழந்தன.

(இ) இவ்விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் தந்தைக்கு அரசு, "முதல் அமைச்சர் நிவாரண நிதி"யிலிருந்து ரூ. 2,000 வழங்கியுள்ளது. இதைத் தவிர, இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 4,990 ரொக்க மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி அவர்களுக்கு உணவும் உறைவிடமும் வழங்கியது. குடிசை மாற்று வாரியம் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடைகள் வழங்கியுள்ளது. மேலும், மேற்படி வாரியம் அவர்களுக்கு மாற்று வீடுகள் கட்ட முற்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தீ விபத்தில் பொருளனைத்தையும் இழந்தவர்களுக்கு மொத்த மதிப்பில் நான்கில் ஒரு பங்கை இலவசமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கடனுகை இப்போது வழங்கப்படுகிறது, அப்படிக் கொடுப்பதற்கு இயலாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 80 ரூபாய் மானியம் ஒரு வீட்டுக்கு என்ற முறையிலே கொடுக்கிறார்கள். இப்போது இருக்கிற விலைவாசியேற்றத்தின்படி பார்த்தால் அந்தத் தொகை ரொம்பவும் குறைவானது. ஆகவே, அதற்குத்தகுந்தபடி உயர்த்திக்கொடுப்பதற்கு குறைந்தது 250 ரூபாயாவது ஒரு வீட்டிற்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே கொடுத்த 30 ரூபாய் துணிமணிகளுக்காக 10 ரூபாய் ஆகமொத்தம் 40 ரூபாய் என்று இருந்தது இப்போது 60, 20 என்று உயர்த்தப்பட்டு 80 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும் உயர்த்துவதற்கு இப்போது இயலாது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : பேரவைத் தலைவரவர்களே, தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ரொக்க வசதி அரசு கொடுத்து விடுகிறது. ஆனால் வீடுகளைப் புதுப்பிப்பதற்காகக் கடன் விண்ணப்பங்களைக் கொடுத்தால் கிட்டத்தட்ட

1975 மார்ச் 7]

8 மாதங்கள், 10 மாதங்கள் ஆகின்றன. இதனால் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்கு அரசு விரைவான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, கடன் கொடுத்தால் அது திரும்ப வாங்கப்பட வேண்டும். எனவே அவர்களுக்கு இருக்கும் திருப்பிக் கொடுக்கும் சக்தி முதலியவற்றைப் பரிசீலித்துத்தான் கடன் வழங்கப்படுகிறது. எனவே, அதுபற்றி உடனடியாகச் செய்ய இயலாது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் துயரைத் துடைப்பதற்காக அன்றோ அல்லது மறுநாளோ இந்த ரூபாய் இப்பொழுது துரிதமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, எரியும் வீடுகள் என்று பார்த்தால் பெரும்பாலும் ஏழை எளிய தாழ்த்தப்பட்டவர்களுடைய வீடுகளாகத்தான் இருக்கின்றன. உடனடியாக அவர்களுக்கு 80 ரூபாய் இனமாகக் கொடுத்தாலும் மறுபடியும் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 2,500 ரூபாய் முன்பணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, கடன் கொடுத்தால் அதைத் திரும்ப வாங்குவதில் இருக்கின்ற சங்கடங்கள் அவர்களுக்குத் தெரியும். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இப்பொழுது அரசு ஒரு தொகையைக் கடனைக் கொடுக்கிறது. எனவே, அப்படிப்பட்ட எரிகின்ற இடங்களில் அப்படிப்பட்ட முறையிலே வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

கிராம சேவக்குகள்.

* 230 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம சேவக்குகளில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற பாகுபாட்டை நீக்கி அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: இல்லை.